**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 106/2020**
**நாள் 14/03/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜெயசந்திரன் | த/பெயர் – சேஷமநாயுடு |
| வயது – | தொழில் – |
| விலாசம் – குமரசிரளபாக்கம் | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் குடியுள்ளது குமாரசிரளப்பாக்கம் என்றால் சரிதான். 2ம் வாதி ஜெயலட்சுமி எனது மனைவி. வழக்கு சொத்துகள் குமார சிரளப்பாக்கம் கிராமத்தில் உள்ளது. நானும் எனது மனைவியும் பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யதுள்ளேன் என்றால் நான் எனது சொத்து குறித்து கிரைய ஒப்பந்தம் செய்யவில்லை என்றும் அடமானத்திற்கு தான் கொடுத்தேன் என்று கூறி தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது பொய் என்றும் நான் அடமானம் கொடுத்ததாக வழக்கில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரர் பத்தவச்சலநாயுடு அவார். அவரும் இதே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து இன்றைய தேதிவரை நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். எனது சகோதரரும் நான் கூறுவதை போல் கிரைய ஒப்பந்தம் செய்யவில்லை அடமானம் தான் செய்தோம் என கூறியுள்ளார் என்றால் சரிதான். எனது தந்தைக்கு பாகப்பிரிவினை சொத்தை தான் இந்த வழக்கில் தாவாவாக காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். அதை தவிர எனது மனைவி பெயரில் 1994ல் பெயரில் ஏற்ப்பட்ட செட்டில்மெண்ட்

சொத்தையும் இந்த வழக்கில் காண்பித்துள்ளேன். சொத்துக்களின் அசல் ஆவணத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கூறும் பரிவர்த்தனைகள் எங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கு இடையே ஏற்ப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியை ஏன் தரப்பினராக சேர்த்தேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது அவரை நான் பாா்த்ததில்லை.

**குறுக்குவிசாரணைக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**